# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,699 — 1959 මාර්තු 13 වැනි සිකුරාදා — 13.3.1959**

11,699 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II — சட்ட சம்பந்தமானது

## சுப்பிறீங்கோட் கிறிமினல் வழக்கு விசாரணைகள் பற்றிய அறிவித்தல்கள்

### பிரசித்த பத்திரம்

*இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : மேற்குச்சுற்று நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் கொழும்பு டிஸ்திறிக்கைச் சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை,* **1959** *ம் ஆண்டு பங்குனி மாதம்* **20** *ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலை* **11** *மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும். ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.*

இங்ஙனம்,
ஜி. பி. தம்பையா,
மே. மா. பிஸ்கால்.

பீஸ்கால் கந்தோர் கொழும்பு,
**1959** ம் ஸ்ரீ பங்குனி மீ **5** ந் உ.

### பிரகடனம்

*இலங்கைத் துவீபத்தின் கௌரவ உயர்தர நீதிமன்றம் மேல் மாகாண வட்டாரத்துக்கென நடாத்தும் கிறிமினல் வழக்கு விசாரணை கொழும்பில் உள்ள நீதிமன்றத் கட்டடத்தில்* **1959** *ம் ஆண்டு மார்ச் மாதம்* **20** *ந் திகதி காலை* **11** *மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்று, குறித்த உயர்தர நீதிமன்றம் எனக்குப் பிறப்பித்துள்ள கட்டளையின் பிரகாரம் இத்தாற் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மேலும் குறித்த வழக்கு விசாரணையிற் சம்பந்தப்பட்டவர்கள் யாவரும் மேற்சொல்லப்பட்ட நேரத்திலும், இடத்திலும் சமுகமாயிருந்து, அனுமதி கேட்டுப்பெற்றன்றி அவ்விடத்தை விட்டு நீங்காதிருக்கக்கடவர்.*

எல். பி. அபயரத்ன,
ச. மா. பிசுக்கால்.

பிசுக்கால் கந்தோர் இரத்தினபுரி,
**1959** ம் ஸ்ரீ மார்ச் மீ **10** ந் உ.

### விளம்பரம்

**1959** ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் **27** ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக விருப்பதால், **1959** ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதத்தின் நான்காம் வாரத்திற்குரிய இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை **1959** ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் **26** ந் திகதி வியாழக் கிழமை பிரசுரிக்கப்படுமெனவும், அப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் **1959** ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் **23** ந் திகதி திங்கட்கிழமை பி. ப. **4** மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேரவேண்டுமெனவும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு.
**1959** ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் **10** ந் திகதி.

பேர்ணர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலைவர்.


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது